**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 57/2022**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆடிவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 03rd, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆலங்குளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தென்காசி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 30.05.2015ம் தேதி, உதவி ஆய்வாளர் காளீஸ்வரி என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண்.254/2015, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 323, 307, 506(2) இதச வழக்கினை நான் விடுமுறையில் இருந்ததினால், தென்காசி காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்த செங்கோட்டை காவல்நிலைய ஆய்வாளர் திரு.முனீஸ்வரன் என்பவர் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் விசாரணை செய்துள்ளார். அதன் பின்பு இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவயிடம் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் ஏற்கனவே முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் நான் எதுவும் பதிவு செய்யவில்லை.

பின்பு, 11.09.2015ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட காவலர் சக்கீர் என்பவருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர்.திரு.மூர்த்திராஜ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினம் என்னுடைய விசாரணையை முடித்து, வழக்கின் சம்பவம் உண்மையென தெரிந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 323, 307, 506(2) இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவயிடமான பேருந்து நிலையம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரியல்ல, சம்பவயிடம் பேருந்து நிலையத்திற்கு பின்புறமாகும். சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றிருந்தால் தனிநபர் சாட்சிகளை சேர்த்து விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையில் கொலை செய்ய முயற்சித்தார் என்ற வாசகம் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. அரசு பணியை செய்ய விடாமல் தடுத்ததாக வாசகம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காவல் சக்கீர் என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டதாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்டவர் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்ற விபரத்தினை மருத்துவரிடம் நான் கேட்டேனா? என்றால் அவர் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

லேசான காயம் என்றால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு என்ன வகையான மேல்சிகிச்சை கொடுத்தார்கள் என்பதனை நான்

விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையை 07.08.2021 ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். கால தாமதத்திற்கான காரணத்தை இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவயிடம் சென்று பார்வையிடவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தையும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துக்கொண்டேன் என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் ஒருதலைபட்சமாக சாட்சிகளை விசாரித்து பிழையான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.04 18:40:48 +0530